செய்தி வெளியீடு எண்: 927 நாள்: 19.10.2010

# தமிழக வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்ற நிலைகள் குறித்து அமைச்சர் – அதிகாரிகள் முன்னிலையில்

# முதலமைச்சர் கலைஞர் ஆய்வு செய்தார்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் வேளாண்துறை செயல்படுத்திவரும் திட்டங்கள் குறித்த ஆய்வினை மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர், செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் ஆய்வு செய்தார்.

உணவு உற்பத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் இந்த அரசு, கடந்த 5 ஆண்டு காலத்தில் 7 ஆயிரத்து 437 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, 304 இலட்சம் மெட்ரிக் டன் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. தொடர்ந்து உணவு உற்பத்தியைப் பெருக்கிடத் தேவையான இடு பொருட்களான விதை, உரம், பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்குத் தங்கு தடையில்லாமல் கிடைப்பதற்கேற்ப இப்பொருள்களின் இருப்பினைக் கண்காணித்து சீராக விநியோகம் செய்திட அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்றும்,

‘‘இராஜராஜன் 1000’’ தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்தால் எக்டேருக்கு சராசரியாக 7,000 கிலோ முதல் 8,000 கிலோ வரை அரிசி உற்பத்தி கிடைக்கும் என்பதால், இத்தொழில்நுட்பத்தைக் கடைப்பிடிப்பதற்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள 2.43 இலட்சம் மார்க்கர்கள், 3.63 இலட்சம் கோனா களை எடுக்கும் கருவிகள் ஆகியவற்றுடன்; இக்கருவிகள் மேலும் தேவைப்படும் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கிட ஆவன செய்திட வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும்;

துல்லிய பண்ணைப் பயிர்த் திட்டம் மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்திட வேண்டுமென்றும்;

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐவகை மரபணுப் பூங்காக்கள் அந்தந்த நிலப்பகுதிகளுக்குரிய அரிய வகைத் தாவரங்களைப் பாதுகாப்பதுடன், அந்தந்த பகுதி விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவுறுத்தினார்.

அரசு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளதன் பயனாக, 2006இல் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 141 இலட்சம் மெட்ரிக் டன் என்பது தற்போது 179 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்ந்துள்ளது என்பதையும் அதிகாரிகள் வாயிலாக அறிந்த முதலமைச்சர் கலைஞர் இந்த உற்பத்தி மேலும் அதிகரிக்கப்பட ஊக்கமுடன் செயல்படுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் வெள்ளம் மற்றும் வறட்சியால் பயிர் பாதிக்கப்பட்ட 8 இலட்சத்து 61 ஆயிரத்து 822 விவசாயிகளுக்கு இதுவரை 944 கோடியே 8 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ள விவரங்களைக் கேட்டறிந்த முதலமைச்சர் கலைஞர், மேலும் அதிக எண்ணிக்கையில்

விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்திட உடனடியாக நடவடிக்கைகளை எடுத்திடுமாறு முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

வேளாண் சாகுபடியில் தொழிலாளர் பற்றாக் குறையை ஈடு செய்ய வேளாண் இயந்திரங்கள் வாங்க விரும்பும் விவசாயிகளுக்கு உடனடியாக மானியத்துடன் கடனுதவி கிடைத்திட ஆவன செய்திட வேண்டுமென்றும்;

உழவர் சந்தைகள் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பெரும்பயன் அளித்து வருவதால் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள 153 உழவர் சந்தைகளுடன், புதிதாக அமைக்கப்பட்டுவரும் 25 உழவர் சந்தைகளையும் விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

நாளொன்றுக்கு 15 மெட்ரிக் டன்னுக்கு மேலாகக் காய்கறிகள் வரக்கூடிய 22 உழவர் சந்தைகளில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர் பதன கிட்டங்கி வசதிகள் 1 கோடியே 33 இலட்சம் ரூபாய்ச் செலவில் செய்து கொடுக்கப்பட்டுள்ளதற்கும்;

திருநெல்வேலி மாவட்டம், காவல் கிணற்றில் 1 கோடியே 63 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்ச் செலவில் மலர் ஏல மையம் அமைக்கப்பட்டுள்ளதற்கும் அதிகாரிகளைப் பாராட்டிய முதலமைச்சர் கலைஞர், இவை விவசாயிகளுக்கு முழுமையாகப் பயனளிக்கும் வகையில் பழுதின்றி முறையாகச் செயல்படுகின்றனவா என்பதனை அடிக்கடி கண்காணித்துச் செயல்படுத்திட வேண்டும் என்றும் ;

ஒடைப்பட்டியில் திராட்சைக்கும், கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கும், மேச்சேரி மற்றும் பாலக்கோட்டில் தக்காளிக்கும், பொங்கலூரில் வெங்காயத்திற்கும் தலா 1 கோடி ரூபாய்ச் செலவிலும், பட்டுகோட்டையில் தேங்காய்க்கென 4 கோடி ரூபாய்ச் செலவிலும் நடைபெற்றுவரும் வணிக வளாகக் கட்டுமானப் பணிகளையும்;

திருச்சி, மோகனூர், திருவைகுண்டம், சின்னமனூர் ஆகிய இடங்களில் தலா 50 இலட்சம் ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்டுவரும் வாழைக் காய்களைப் பழுக்க வைக்கும் கூடங்களின் கட்டுமானப் பணிகளையும் விரைவில் முடித்து அவற்றைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவர அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இந்த அரசு விவசாய பம்ப் செட்டுகளுக்கு ஏற்கனவே இலவச மின்சாரம் வழங்கிய திட்டத்தில் 21 இலட்சத்து 98 ஆயிரத்து 790 விவசாயிகள் பயனடைந்துவரும் நிலையில், சுயநிதி அடிப்படையில் மின் இணைப்புப் பெற்றுள்ள 40 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு ஆண்டுதோறும் இலவச மின்சாரம் வழங்கப்படுவதையும், இலவச மின்சாரம் கோரி தற்போது நிலுவையில் உள்ள 2 இலட்சம் விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளதையும் நினைவுகூர்ந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்திட்டப் பணிகளைச் சுணக்கம் இல்லாமல் உடனுக்குடன் நிறைவேற்றி விவசாயப் பணிகள் தொய்வின்றி நடைபெறவும், விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரவும் மிகுந்த பொறுப்போடு பணியாற்றிட வேண்டுமென அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பித்தார்.

இந்த ஆய்வின் தொடக்கத்தில், கேரள மாநிலத்தில் உரித்த தேங்காய் கொள்முதல் செய்வதில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் குறித்து அறிந்து வந்து அரசுக்கு அறிக்கை தர அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி திரு. எஸ்.ஆறுமுகம், தலைமைச் செயலாளர் திருமதி சு. மாலதி, நிதித் துறை முதன்மைச்

**செயலாளர் திரு. க. சண்முகம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் முனைவர் பா. இராமமோகனராவ், வேளாண்மைத்துறை ஆணையர் திரு.சி.கோசலராமன், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் பி.சந்திரமோகன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் திரு. அதுல் ஆனந்த், சர்க்கரைத்துறை ஆணையர் திரு.விக்ரம் கபூர், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் திரு.இரா.சுப்பிரமணியன், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பி.சுப்பையன், வேளாண்மைப் பல்கலைக்கழக இயக்குநர் முனைவர் எம்.பரமாத்மா, விதைச் சான்று மற்றும் அங்கக சான்றளிப்புத்துறை இயக்குநர் திரு.சு.கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.**

* * *

**வெளியீடு:–**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**